கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
**முன்னிலை : திரு.S.சாது சிவசுப்பிரமணியன், B.A., B.L.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் நாள், வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.06/2026
இன்
அசல் வழக்கு எண்.158/2020
* * * *

1. தெய்வப்பெருமாள்
2. கண்ணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. பாலமணிண்டன்
2. ஜோதிபாசு
3. கருப்பையா
4. சமுத்திரப்பாண்டி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இன்று 11.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், 3,4 எதிர்மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முத்துகிருஷ்ணன் அவர்கள்

ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை 26 விதி 9ன் கீழ் தாவா அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் அவர்களை நியமனம் செய்து உரிய நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களின் உதவியுடன் ஆவணங்களின் அடிப்படையில் தாவாச்சொத்துக்கள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிளாட் எண்களை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

1.1) மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த மனுவில், தாவா சர்வே எண்.49/2-ல் கட்டுப்பட்ட தாவாச்சொத்துக்களும் மற்றும் அதன் கூடுதல் விஸ்தீரணமும் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சர்வே எண் பல பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு 1வது இலக்கச்சொத்தான பிளாட் எண்.56 என்பது 1ம் மனுதாரர்/வாதிக்கும்,

2வது இலக்கச்சொத்தான பிளாட் எண்.59 என்பது இந்நிர் 2ம் மனுதாரர்/2ம் வாதிக்கும் ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றும், இந்நிலையில் தாவாச்சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு உள்ள அனுபவத்தினை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்ய முற்பட்டனர் என்றும், மேற்படி 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு பிளாட் எண்.47 மற்றும் 3ம் பிரதிவாதிக்கு பிளாட் எண்.50ம் ஒதுக்கப்பட்டு அனுபவம் செய்து வந்தனர் என்றும், மேற்படி 1,3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் தாவாச்சொத்துக்களில் எந்தவித உரிமையும் இல்லை என்றும், மேலும், இந்நிர் 2,4 எதிர்மனுதாரர்கள்/2,4 பிரதிவாதிகளும் இந்நிர் 1,3 எதிர்மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து இடையூறு செய்ததால் அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நிர் மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.2) இந்நிலையில், தாவாச்சொத்துக்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிளாட் எண்களை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தால் அவரவர்களுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் தெளிவாக தெரியவரும்

என்றும், அதன்பொருட்டு தாவா அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியம் என்பதால் இந்நிர் இடையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், இந்நிர் இடையீட்டு மனுவினை பொறுத்து எதிருரை தாக்கல் இல்லையென்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**3) தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

வழக்கு ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள் தங்களது தரப்பு மனுவில், தாவா 1, 2 இலக்கச்சொத்துக்களில் உள்ள மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவத்தினை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று பரிகாரம் வழங்கக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**4) தீர்வு:-**

ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. அசல் இந்நிர் மனுவானது 2024ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது.

4.1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிராக இடையூறு செய்யாமல் இருக்கும்பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் தாவா வழக்கினை இந்நிர் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளதாலும், இந்நிர் பிரதிவாதிகள் மேற்படி மனுதாரர்கள்/ வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 1,2 இலக்கச்சொத்துக்களில் இடையூறு செய்துவருவதாக மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டும், மேற்படி அசல் வழக்கில் முழுமையான தீர்வு காண்பதற்கு வழக்குச்சொத்தை முழுமையாக அளவீடு செய்து ஆக்கிரமிப்பு உள்ளதா என்பது குறித்து தீர்மானித்தால் மட்டுமே அசல்

வழக்கில் முழுமையான தீர்வு காண இயலும் என்பதாலும், மேற்படி 1,2 இலக்கச்சொத்துக்களையும் அதனுடன் இந்நிர் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிளாட் எண்கள்.49,50யும் இந்நீதிமன்றத்தின் மூலம் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அவர் மூலம் அளவீடு செய்தால் அவரவர்களுக்கு அரசாங்கத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்ட இடம் தெளிவாக தெரியவரும் என்று இந்நிர் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

4.2) இந்நிலையில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளின் இந்நிர் இடையீட்டு மனுவினை அனுமதிப்பது குறித்து எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதை கருத்தில்கொண்டும், வழக்குச்சொத்தை ஆணையர் மூலம் அளவீடு செய்வதால் தரப்பினர்கள் எவருக்கும் சட்டப்படியான பாதகம் எதுவும் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் முழுமையான தீர்வுக்கு நீதிமன்ற ஆணையர் அவர்கள் தாவாச்சொத்தினை அளவீடு செய்வது அவசியமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனு சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்தினை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையராக கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.ரோஜாரமணி (MS No.148/2005) என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தில் ரூ.4000/-த்தினை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் இந்நிர் மனுதாரர்கள்/வாதிகள் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மீதி நீதிமன்ற கட்டண தொகையான ரூ.4000/-த்தினை நீதிமன்ற ஆணையர் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபின்னர் நீதிமன்ற ஆணையர் வசம் மனுதாரர்கள்/வாதிகள் வழங்கவேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

மேலும், மேற்படி நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தினை சம்பந்தப்பட்ட சர்வேயரின் மூலமாக சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர்

அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்:30.06.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 11.06.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.11 17:46:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** : இல்லை

2.**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.11 17:46:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.06/2026
இன்
அசல் வழக்கு எண்.158/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:11.06.2026.